# 27 சைவ தர்மம்

தருமம் என்பது இந்துசமயத்தில் வாழ்க்கைக்கான சரியான வழிமுறையாகச் சொல்லப்பட்டிருக்கும் நீதி நெறி அல்லது போதனைகள் ஆகும். இது கொடை, கருணை, தயை போன்ற பல்வேறு பொருள் தரும் சொல்லாகவும் உள்ளது. இந்து சமயத்தை 'சனாதன தருமம்' என்று அழைப்பர். வடமொழி நூலான மனுதர்ம சாத்திரம் வருணாசிரம தருமம் என நான்கினைக் குறிக்கிறது. பொதுவாக கொடையாளர்கள் அல்லது யாசிப்பவர்கள் தருமம் என்ற சொல்லைப்பயன்படுத்துவர்.

மனிதர்களைப் பொறுத்தவரை தருமம் என்றால் சரியான பாதையில் நடப்பது ஆகும். உலகத்திலுள்ள மனிதர்கள் இவ்வாறு நீதி நெறியில் வாழ்வது மட்டுமல்லாமல், வான் வெளியில் உலகம் சுழல்வதும், அண்ட சராசரங்கள் ஒரு ஒழுங்கில் இயங்குவதும் தருமம் எனப்படும். இறைவனின் விதிகள் தர்மம் என்கிறது இந்து சமயம். வேதாந்த சாத்திரங்களின்படி ''எது தாங்கு கின்றதோ அதுவே தர்மம்'' என்று வரையறுத்துக் கூறுகிறது. இத் தருமங்கள் பல வகைப்படும். அவற்றில் நாம் அன்னதானம் செய்தல், தண்ணீர்ப் பந்தல் அமைத்தல் ஆகிய தர்மங்களை இங்கு நோக்குவோம்.



## அன்னதானம் செய்தல்

அன்னதானம் என்றால் பசியுற்றோருக்கு உணவை உவந்து வழங்குவதைக் குறிக்கும். மேலும் பசியுற்றோருக்கு உணவளிப்பது சிறந்த மனிதப் பண்புகளில் ஒன்றாக கருதப்படுகின்றது.

அன்னத்தை துவேஷிக்கக் கூடாது

அன்னத்தை மிகுதியாக உண்டாக்க வேண்டும் - அது விரதம்

அன்னத்தை வேண்டி வந்த எவரையும் தள்ளிவிடக் கூடாது

ஆகையால் எவ்விதத்திலாவது மிகுதியாக அன்னத்தை தேடிக் கொள்ளவேண்டும். வருபவர்களுக்கு அன்னம் தயாராக இருக்கின்றதென்று சொல்லுவர் பெரியோர்.

ஆயிரக்கணக்கான ஆண்டுகள் பழமை வாய்ந்த பாரத ரிஷிகளின் சமூக சிந்தனைதான் தைத்ரிய உப நிஷடத்தில் வரும் எக்காலத்திலும் பொருந்தும் சிந்தனை பசியற்ற பாரதத்தைக் காண விழையும் சிந்தனை. இங்கு வாழும் மனிதருக்கெல்லாம் வயிற்றுக்கு சோறிடல் வேண்டும் என்ற சிந்தனையால் விளைந்ததே அன்னதானம் உயரிய தானம் தானங்களில் சிறந்த தானம்.



உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோர் என்பதற்கமைய நாம் முடிந்தவரை பிறருக்கு அன்னதானம் செய்தலில் ஈடுப்பட வேண்டும். பாடசாலைகளில் கொண்டாடப்படும் விழாக்களின் போது அன்னதானம் செய்தலை நாம் வழக்கமாகக் கொண்டால் அது எம் வாழ்கையில் பல புண்ணியங்களைத் தேடித்தரும் என்பதில் ஐயமில்லை. அன்னதானம் புரிபவர் மனத்தூய்மையுடன் இறைச்சிந்தனையுடனும் அகங்காரமின்றியும் செய்தல் வேண்டும். நாயன்மார்களில் இளையான்குடி மாற நாயனார் அன்னதானம் புரிந்து முத்தியடைந்தவராவார். ஈழத்தில் நயினை நாகபூசணி அம்மன் ஆலயத்திலும் செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்திலும் நித்திய அன்னதானம் வழங்கப்படுவது குறிப்பிடதக்கது.

### அன்னபூரணி ஸ்லோகம்

**அன்னபூரணே சதா பூர்ணே சங்கரப்ராணவல்லபே!**
**ஞான வைராக்ய சித்யர்த்தம் பிக்ஷாடம் தேஹி ச பார்வதி!!**

உலக மக்களின் பசிப் பிணியைப் போக்க பராசக்தி அன்னபூரணியாக அவதரித்து காசியில் அருள் புரிந்து கொண்டிருக்கும் அன்னப்பூரணியின் இந்த ஸ்லோகத்தை தினமும் சாப்பிடும் போது சொல்லி வந்தால் என்றைக்கும் உணவிற்கு குறைவு வராது.

### தண்ணீர்ப்பந்தல் அமைத்தல்




அன்னதானம் வழங்குதலைப் போன்றே தண்ணீர்ப்பந்தல் அமைத்து தாகசாந்தி செய்தலும் மேலான தர்மமாகும். தாகத்தோடு வருவோருக்கு இல்லையென்று சொல்லாது தண்ணீர் வழங்க வேண்டும். விழாக்காலங்களில் நாம் கோயில்களில் தண்ணீர் பந்தல் அமைத்து வருகின்ற அடியார்களுக்கு தாகத்தைப் போக்கும் தொண்டினை மேற்கொள்ள முடியும். இதன்போது மனத்தூய்மையுடனும், இறைச்சிந்தனையுடனும் செயற்படுதல் வேண்டும். அப்பூதியடிகள் தண்ணீர்ப்பந்தல் அமைத்து அடியவர்களின் தாக ச ாந்தியைப் போக்கி தர்மம் செய்து வந்தார்.

## பயிற்சிகள்

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

1. தர்மம் என்றால் என்ன?
2. அன்னதானம் என்றால் என்ன?
3. அன்னதானம் பற்றி வேத சுலோகம் குறிப்பிடும் கருத்தைத் தருக?
4. ஈழத்தில் நித்திய அன்னதானம் எவ்வாலயத்தில் வழங்கப்படுகின்றது?
5. தண்ணீர்ப்பந்தல் அமைத்தலோடு தொடர்புடைய நாயனார் யார்?

## செயற்பாடு

உமது பாடசாலையில் இடம்பெறும் சமய விழாக்களின் போது தண்ணீர்ப் பந்தல் அமைத்து அடியவர்களின் தாகத்தை தீர்க்குக.

## பாடச்சுருக்கம்

- ★ சைவம் தர்மங்களாலேயே கட்டியெழுப்பப்பட்ட மதமாகும்.
- ★ சைவம் பல தர்மங்களைக் குறிப்பிடுகின்றது.
- ★ வாழ்வில் நாமும் பல தர்மங்களைப் புரிதல் வேண்டும்.
- ★ தர்மங்களில் அன்னதானம் முக்கிய தர்மமாகக் கொள்ள வேண்டும்
- ★ அடியவர்களின் தாகத்தைத் தீர்ப்பதும் முக்கிய தர்மமாகும்.